


# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்

சாஸ்திரத்திலே “இந்த மாதிரி இருக்க வேண்டும், இந்த மாதிரி இருக்கக் கூடாது” என்று சொல்லி இருக்கிறது. இந்த விதி நிஷேதங்களை நாம் அனுஷ்டித்தால் நமக்குத்தான் சிரேயஸ் ஆகும். இதை உதாஸீனம் பண்ணினால் நமக்குத்தான் அசிரேயஸ், நாம் ஆசரிக்காமல் விட்டால் சாஸ்திரத்திற்கோ அல்லது சாஸ்திரத்தை உபதேசித்த ஈச்வரனுக்கோ ஒரு நஷ்டமும் இல்லை. அதே மாதிரி நாம் பள்ளியில் படிக்கிறோம். நம் ஆசிரியர், “நன்றாக படி, இந்த மாதிரி இருக்காதே; இந்த மாதிரி இரு” என்று சொல்லிய வண்ணம் செய்தால் நாம் பரீட்சையில் பாஸ் ஆகி அடுத்த வகுப்பிற்கு போவோம். அவர் சொன்ன மாதிரி செய்யவில்லையெனில்



நாம் பரீக்ஷையில் ஃபெயில் ஆகி அங்கேயே உட்கார்ந்திருப்போம். நான் அவர் சொன்ன மாதிரி செய்தாலும் செய்யாவிட்டாலும் அவருக்கொன்றும் ஆகப்போவது இல்லை. அவருடைய காரியம் அவருக்கு நடந்து கொண்டே இருக்கிறது. அதேபோல், முன்னோர்கள் நமக்கு செய்த உபதேசங்கள் நம்முடைய சிரேயஸ்ஸிற்காக செய்த உபதேசங்களே ஆகும். அந்த உபதேசங்களை ஆசரிக்க வேண்டியது நமக்கு அவசியம்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

मानेन रक्ष्यने धान्यं मश्वान् ग्क्ष्यत्यनुक्रमः ।
अभीक्ष्णदर्शनं गाश्च स्त्रियो रक्ष्याः कुचेलतः ॥ ७७ ॥
மானேன ரக்ஷ்யனே தா4ன்யம்’ மஶ்வான் க்3க்ஷ்யத்யனுக்ரம: |
அபீ4க்ஷ்ணத3ர்ஶனம்’ கா3ஶ்ச ஸ்த்ரியோ ரக்ஷ்யா: குசேலத: || 77 ||

நெல் முதலிய தான்யங்களை அளவினால் பாதுகாக்க வேண்டும். குதிரைகளை மென்மையாகவும் அன்பகவும் தேய்ப்பதும், நடத்திச் செல்வதும் மூலமாக காக்கவேண்டும். பசுக்களை ரக்ஷிக்கவேண்டிய விதமானது அவைகளை அடிக்கடி பார்ப்பதில் மூலம் தான். ஸ்திரீளுக்கு மட்டமான வஸ்திரங்களைக் கொடுக்காமல், நல்ல வஸ்திரங்களைக் கொடுப்பதினால் அவர்களை பாதுகாக்க முடியும்.


न कुलं वृत्तहीनस्य प्रमाणमितिमे मतिः ।
अन्तेष्वपि हि जातानां वृत्तमेवविशिष्यते ॥ ७८ ॥
ந குலம்’ வ்ரு’த்தஹீனஸ்ய ப்ரமாணமிதிமே மதி: |
அந்தேஷ்வபி ஹி ஜாதானாம்’ வ்ரு’த்தமேவவிஶிஷ்யதே || 78 ||

ஒருவனது நல்ல நடத்தை இல்லாத குணத்தினால் அவன் குலம் நல்லதாக இருந்தபோதிலும் அது சிறப்பைத் தருவது என கருத்து, அதுவே ஒருவன் கீழ்ப்பட்ட வகுப்பில் பிறந்தவனாய் இருந்தபோதிலும் அவனது நல்ல நடத்தையே அவனுக்கு சிறப்பை அளிக்கும்.

य ईर्षुः परवित्तेषु रूपे बीर्ये कुलान्वये ।
सुख सौभाग्य सत्कारे तस्य व्याधिरनन्तकः ॥ ७९ ॥
ய ஈர்ஷு: பரவித்தேஷு ரூபே பீ3ர்யே குலான்வயே |
ஸுக2 ஸௌபா4க்3ய ஸத்காரே தஸ்ய வ்யாதி4ரனந்தக: || 79 ||


பிறருடைய பொருள்களையும், அழகையும், வீர்யத்தையும், சிறந்த பாக்யங்களையும் பூஜையையும் கண்டு பொறாமைப் படுகிறவனுக்கு முடிவில்லாத பல வியாதிகள் ஏற்பம். முடிவில்லாத பல வியாதிகள் ஓர் மனிதனுக்கு ஏற்படுவதற்குக் இதுவே காரணதம் என்று கூறுகிறார்.

(தொடரும்....)



# Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 11. இறைவனின் தரிசனம் எப்போது கிடைக்கும்?



அதனால் நாம் செய்யக்கூடிய நல்ல காரியமோ, பூஜையோ, பிரச்சாரத்திற்காக அல்ல, அவற்றினால் ஈச்வரன் திருப்தியடைய வேண்டும் என்றே நம் அபிப்ராயம் இருக்க வேண்டும். அதனால்தான் பீஷ்மர்,


**யத்பக்த்யா புண்டரீகாக்ஷம்**
**ஸ்தவைரர்சேன்னர: ஸதா**


என்று கூறினார். பக்தியினால் ஒருவன் பகவானுடைய நாமத்தை ஜபித்தால் அதுவே பெரிய தர்மம் என்று சுட்டிக் காட்டினார்.

பத்து நிமிடமாவது பக்தியுடன் இறைவன் பெயரைச் சொன்னால் அது பெரும் நற்காரியம். சிலர் பூஜையோ, ஸந்தியாவந்தனமோ செய்து கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஒராயிரம் எண்ணங்கள் அவன் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். ‘அவனிடமிருந்து இவ்வளவு பணம் வர வேண்டும். இவன் மீது 'கேஸ்' போட வேண்டும்’ என்று பல யோசனைகளுடன் இருப்பார்கள். அது தவறு. அந்த பத்து நிமிஷமாவது மற்ற விஷயங்களை மறந்துவிட்டு பகவத் பூஜையிலேயே மனதை நிலைத்திருக்கச் செய்யுங்கள். அது உங்களுக்கு பரம சிரேயஸ்ஸிற்குக் காரணமாகும். குறைந்த நேரம் பூஜை செய்தாலும் பக்தியோடு செய்தால், அது விசேஷமான பலனைத் தரும். ஆகவே, சிரேயஸ்ஸை விரும்பும் அனைவரும் பகவானை பக்தியுடன் பூஜித்து அவனுடைய அருளைப் பெறட்டும்.

**ஹர நம: பார்வதீ பதயே | ஹர ஹர மஹாதேவ ||**
**ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||**

இடம் : பாப்பாங்குளம் நாள் : 13.04.1987









## 12. இறைவனின் அருள் தேவை

**தாராநாயகசேகராய ஜகதாதாராய தாராதரச்சாயா -**
**தாரககந்தராய கிரிஜாஸங்கைக ச்ருங்காரிணே |**
**நத்யா சேகரிணே த்ருசா திலகினே நாராயணேனநாஸ்த்ரிணே**
**நாகை: கங்கணினே நகேன க்ருஹிணே நாதாய ஸேயந்நதி: ||**


எல்லோருக்கும் ஒழுங்காகக் காரியம் செய்ய வேண்டும் என்ற அபிப்ராயம் இருக்கின்றது. மனதில் அப்படி ஸங்கல்பம் செய்து நாம் முயற்சியும் செய்கின்றோம். ஆனால், எல்லோருக்கும் பலன் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒரு பெரியவர்,

**துல்யம் கர்ஷந்தி ப்ருதிவீம் துல்யம் சாஸ்த்ராண்யதீயதே |**
**உன்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி தைவஸ்யைகஸ்ய லீலயா ||**


என்று சொன்னார்.

**துல்யம் கர்ஷந்தி ப்ருதிவீம்** - சிறிது நிலம் வைத்துக் கொண்டு இருந்தனர் இருவர். வயலில் இருவரும் சமமாகவே வேலை செய்தனர். ஒருவனுக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை. மற்றொருவனுக்கு நிறையக் கிடைத்துவிட்டது. **துல்யம் சாஸ்த்ராண்யதீயதே** - இரண்டு பேர் ஒரு பெரியவரிடம் சாஸ்திரம் படிக்க வந்தனர். அந்தப் பெரியவர் இருவருக்கும் ஒரே மாதிரியே சாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்தார். யார் மேலேயும் பக்ஷபாதம் இல்லாமல் தனக்குத் தெரிந்ததை இரண்டு பேருக்கும் சொன்னார். இருவரும் ஒரே மாதிரி படித்தார்கள். **உன்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி -** ஒருவன் பெரிய பண்டிதன் ஆகிவிட்டான். இன்னொருவனுக்கு சாஸ்திர அறிவே வரவில்லை. அதற்கு வேறு என்ன காரணத்தைச் சொல்ல முடியும்? குருவின் மேல் தோஷத்தைச் சொல்ல முடியாது. வித்யார்த்தியின் மேலும் தோஷத்தைச் சொல்ல முடியாது. ஏனென்றால், அவன் ரொம்ப ஸ்ரத்தையாகத்தான் கவனித்துக் கொண்டிருந்தான். அப்படியிருந்தும் அவனுக்கு சாஸ்திர அறிவு வரவில்லை என்றால் **தைவஸ்யைகஸ்ய லீலயா -** கேவலம் "அதிருஷ்டமான" ஒரு காரணம் அவனுக்கு அப்பேற்பட்ட பலனையும் இவனுக்கு இப்பேற்பட்ட பலனையும் கொடுத்துவிட்டது. அந்த விஷயத்தில் திருஷ்டமான (நேரடியான) காரணத்தை எதையும் சொல்ல முடியாது.

(தொடரும் …..)



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

## மஹாப்ரக்ஞை — கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால்

இதுவரை ஆசார்யாளிடத்தில் ‘மஹாப்ரக்ஞை” என்கிற குணம் கல்வியறிவு, கற்றோர் அவையில் விரித்துரைக்கும் ஆற்றல், கற்பித்தல் என்ற மூன்று பரிமாணங்களாக வெளிப்பட்ட விதத்தைக் கூறினோம். இனி, ஒரு பீடாதிபதி என்ற முறையில் ஆசார்யாள் செய்தவை பல. உதாரணமாக, அவர் பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற பொழுது மடத்தின் நிதி நிலைமை மோசமாக இருந்தது. சிருங்கேரிக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கான வசதிகள் பல வேண்டியிருந்தன. மடத்தின் நிர்வாகம் அச்சமயம் மைசூர் அரசாங்கத்திடம் இருந்ததால் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய கட்டாயமும் இருந்தது. இவை எல்லாவற்றையும் ஆசார்யாள் தாம் பீடாதிபதியான ஒரு சில ஆண்டுகளுக்குள் சீர்திருத்தினார் என்று தெரிகிறது. மேலும், திட்டம் போடுவதிலிருந்து செய்து முடிப்பது வரை இந்த சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியதில் ஆசார்யாள் பெரும் பங்கு வகித்தார். நிர்வாகச் சீர்திருத்தம், புதிய கட்டுமானப் பணிகள், வேளாண்மை முறைகளில் மாற்றங்கள் என்று தாம் முறையாகப் பயிலாத பல விஷயங்களில் அவருடைய அறிவைச் செலுத்தினார். அப்படியாயின் அவருடைய அறிவாற்றலைப் பற்றி நாம் அர்த்தமுள்ள வகையில் பேச வேண்டுமென்றால் கல்வியறிவு என்ற பரிமாணத்திற்கு அப்பால் செல்ல வேண்டும். அதை இப்பொழுது செய்ய விழைவோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன், “அறிவாற்றல் என்றால் என்ன?" “அதை அறிவது எப்படி?” என்ற கேள்விகளுக்கு விடை “அறிவாற்றல் குறீயீடு" (Intelligence Quotient or IQ) என்பதே. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உளவியலாளர் பலரும் இந்த சோதனையைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். அவர்களுடைய வாதங்களின் அடிப்படை, அறிவாற்றல் குறியீட்டுச் சோதனை மட்டும் ஒருவரின் அறிவாற்றலைக் குறிக்குமா என்ற கேள்வியே. மனிதர்களின் அறிவாற்றல் பல விதங்களில் வெளிப்படுகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உளவியலாளர் பலரும் இந்த சோதனையைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். அவர்களுடைய வாதங்களின் அடிப்படை, அறிவாற்றல் குறியீட்டுச் சோதனை மட்டும் ஒருவரின் அறிவாற்றலைக் குறிக்குமா என்ற கேள்வியே. மனிதர்களின் அறிவாற்றல் பல விதங்களில் வெளிப்படுகிறது. ஆனால், இந்தச் சோதனை முறை தொடக்கக்

கணிதம் மற்றும் தர்க்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்டது; அதாவது இச்சோதனை முறை ஒரு குறிப்பிட்ட கல்வி கலாசாரத்தைச் சார்ந்தே இருக்கிறது. இந்த கலாசாரத்தை “முறைசார் கல்வி” என்று கூறலாம் (சாஸ்திரங்களைப் பயில்வதும் இந்த கலாசாரத்தைச் சேர்ந்தது தான்). எனவே இந்தச் சோதனையை மட்டும் அடிப்படையாக வைத்து எல்லா மனிதர்களின் அறிவாற்றலையும் மதிப்பீடு செய்ய முடியாது என்பதே இவர்களுடைய வாதம். உதாரணமாக, அறிவியலில் பட்டப் படிப்பு படித்த மாணவரோ தர்க்க சாஸ்திரம் பயின்றவரோ இச்சோதனையில் உயர்ந்த குறியீட்டைப் பெற முடியும். ஆனால், பல ஆண்டுகள் இசை பயின்று அதன் நுணுக்கங்களை அறிவதோடு மட்டுமின்றி அழகுணர்ச்சியுடன் வெளிப்படுத்தும் கலைஞர் ஒருவர் இதில் தேர்ச்சி பெறாமல் இருக்க வாய்ப்பு அதிகம். அதே போல், தோட்டக் கலையில் வல்லவர் ஒருவரும் இச்சோதனையில் தேர்ச்சி பெறாமல் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு அறிவாற்றல் (intelligence) இருக்கிறதா இல்லையா என்பதே கேள்வி. நன்கு கல்வி கற்றவரை நாம் “அறிவாளி” என்கிறோம். ஆனால், பொதுவாக நல்ல தோட்டக்காரனையோ, நல்ல பாடகனையோ அவ்விதம் குறிப்பதில்லை. “நல்ல திறமைசாலி" என்றே கூறுகிறோம் (இக்காலத்துச் செவ்விய தமிழில் கூறவேண்டுமாயின், “நல்ல டேலண்ட் சார்”). திறமை அல்லது தகவு (competence) என்பது அறிவின் வெளிப்பாடா, அல்லது வேறொன்றா? “அறிவு” என்று பொதுவாக ஏதாவது உண்டா? அல்லது பல்வேறு திறமைகளுக்கு அடிப்படையாக நூற்றுக் கணக்கான அறிவுகள் உண்டா?" இது போன்ற பல கேள்விகளைக் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக உளவியலாளரும் (psychologists), புலப்பாட்டியலாளரும் (cognition scientists) ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இந்த விஷயம் சம்பந்தமான எல்லா வாதப் பிரதிவாதங்களை நாம் இங்கே கூற இயலாது; கூற வேண்டிய அவசியமும் இல்லை. எனவே நாம் கையாளும் விஷயம் ஆசார்யாளின் பன்முக ஆளுமைக்கும் அவரது அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பு - மட்டும் நன்கு விளங்கச் சில முக்கியமான கருத்துகளை முன்வைப்போம்.



(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

**ஸத் ஸம்ப்ரதாயம்**


An Unit of the e magazine Voice of Jagadguru)

# நீதி மஞ்ஜரீ

**ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.**

**அத்யாயம் - 7**

## பலன் கொடுப்பது கடவுளே



கர்மத்திற்காவது அதிலிருந்து உண்டானதாகக் கல்பிக்கப்படுகிற அபூர்வத்திற்காவது அசேதனமாயிருப்பதால் பலன் கொடுக்கும் யோக்கியதை கிடையாது. சேதனன் ஒருவனை ஒத்துக்கொண்டு தான் தீரவேண்டும். ஜீவர்கள் சேதனமாயிருந்தாலும் கிஞ்சிஜ்ஞர் - களாயிருப்பதால் விசித்திரமாயும் அசிந்தியமாயுமிருக்கிற இந்த ஜகத்திற்குக் காரணமாயிருக்க ஸாத்தியமில்லை; தவிரவும், அவர்களே ஸ்வதந்திரமாக பலனை ஏற்படுத்திக் கொள்ள முடியுமானால் ஜகத்தில் துக்கமிருக்கவே நியாயமில்லை; என்பதாதி காரணங்களால் ஈசுவரனே பலன் கொடுக்கிறாரென்று நம் சாஸ்திரங்களில் யுக்தியி - னாலும் வேத வாக்கியத்தின் பலத்தைக் கொண்டும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விஷயமாகப் பலர்கள் பல கிரந்தங்களில் பிரதிபாதனம் செய்திருப்பதால் அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால், இவ்விஷயம் ஸுலபமாகத் தெரிந்து கொள்ளக் கூடியதுதானே; அப்படியிருக்க இவ்விஷயத்தில் சர்ச்சை செய்ய எப்படி அவசியம் ஏற்பட்டதென்று கொஞ்சம் விசாரிக்கலாம்.

ஒரு நாள் சில பையன்கள் கூடியிருந்த இடத்தில் “இந்த ஜகத்திற்கு ஸூர்யனால் அதிக உபயோகமா? அல்லது சந்திரனால் அதிக உபயோகமா?” என்ற விஷயமாகப் பெரிய விவாதம் ஏற்பட்டுவிட்டது. “ஸூர்யனில்லாமல் போனால் உஷ்ணம் பிரகாசம் இரண்டுமன்னியில் ஜீவராசிகள் முழுதும் நசித்துவிடும்” என்று ஒருவன் சொன்னான். “சந்திரன் இல்லாமல் போனால்


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஓஷதிகள் உண்டாகாமல் போய் ஜீவர்களுக்கு ஆஹாரமகப்படாமல் நசித்துவிடுவார்கள்” என்று மற்றொருவன் சொன்னான். இவ்விதமாகப் பலவாறாக விவாதம் நடந்து கொண்டிருப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஒரு சிறு பையன் “நான் சொல்கிறேன் கேளுங்கள். ஸூர்யன், சந்திரன் இரண்டும் அவசியமாயிருந்தாலும் சந்திரனால் தான் அதிகப் பிரயோஜனம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், ராத்திரி வேளையில் வெளிச்சம் இல்லாத காலத்தில் சந்திரன் பிரகாசித்து ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறான். ஸூர்யனோவென்றால் பகலில் வெளிச்சம் ஸ்வபாவமாகவே இருக்கும்போது அனாவசியமாய்ப் பிரகாசிக்கிறான்" என்று சொன்னான். இவன் சொல்வது மிகவும் நியாயமென்று மற்றவர்களும் ஆமோதித்தார்களாம். ஆனால் ஸூர்யனில்லாமல் பகலில் எப்படி வெளிச்சம் வந்தது என்பதை மாத்திரம் கவனிக்க விட்டுவிட்டார்கள்.

இதேமாதிரி, கர்மம் பலனைக் கொடுக்கும், இந்த பலனை இந்தக்காலத்தில் கொடுக்கும், என்று நியமனம் செய்திருப்பவரை மறந்துவிட்டு வியவஹாரம் செய்கிறார்கள். ஒரு கல்லையெடுத்து மேலே எறிந்தால் கீழேதானே விழவேண்டும் என்ற நியமம் யார் ஏற்படுத்தின தென்று கவனிக்கிறதில்லை. இவ்விதம் கவனிக்காமல் இருப்பதற்குத்தான் என்ன காரணமென்றால், ஈசுவரன் ஸர்வ வியாபியாய் ஸர்வ ஸாதாரணனாய் இருப்பதுதான். வாயு இல்லாமலிருந்தால் நாம் ஜீவிக்க முடியாது. அப்படியிருந்தாலும் வாயு வியாபகமாயும் ஸர்வஸாதாரணமாயுமிருப்பதால் நாம் அதைப் பற்றி நினைப்பதே கிடையாது. வெளியில் பெரும் காற்று அடித்தாலும் நமக்கும் மூச்சுத் திணறினாலும் தான் வாயு என்று ஒன்றுண்டு என்று ஞாபகம் வருகிறது. அதே மாதிரி நாம் ஸாதாரண நாட்களில் ஈசுவரனை மறந்தும் அவர் இல்லவேயில்லை என்றும் வியவஹாரம் பண்ணிக் கொண்டுமிருக்கிறோம். ஏதாவது அத்யாபத்து வந்து நமக்கு சிரமம் ஏற்படும் காலத்தில் வைவதற்காவது ஈசுவரனைப் பற்றிச் சிலர் நினைக்கிறோம்.


வியாபகமாயும் ஸாதாரணமாயுமுள்ள வாயுவுக்கே ரூபமில்லை. அதைவிட வியாபகமாயும் அதைவிட ஸாதாரணமாயுமுள்ள ஆகாசத்திற்கும் ரூபம் கிடையாது. அவ்வாகாசத்தையும் விட வியாபகமாயும் அதைவிட ஸாதாரணமாயுமுள்ள ஈசுவரனுக்கு ரூபம் எப்படி இருக்க முடியும்? ஆகாசம் என்ற பதார்த்தமே கிடையாதென்று சில மதவாதிகள் வாதிக்கிறார்கள். அப்படியிருக்க கிடையாதென்று வாதிப்பது ஒரு ஆச்சரியமா?
(தொடரும் …)  மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||


## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

कुरङ्गवेगस्तव दृष्टपूर्वस्तुरङ्गवेगं परिपश्य वाणि |
इतीव गर्वादधिगम्य मातस्तुरङ्गमस्त्वां परिसेवते किम् ||५४||
குரங்க³வேக³ஸ்தவ த்³ரு’ஷ்டபூர்வஸ்துரங்க³வேக³ம்’ பரிபஶ்ய வாணி |
இதீவ க³ர்வாத³தி⁴க³ம்ய மாதஸ்துரங்க³மஸ்த்வாம்’ பரிஸேவதே கிம் ||54||



தாயே! "வாணி! உன்னால் மானின் வேகம் காணப்பட்டுவிட்டது. குதிரையின் வேகத்தைக் காண்பாய்" எனச் செருக்குடன் அருகில் வந்து குதிரை உனக்குப் பணிவிடை செய்கிறதோ? (54)

तुरङ्गवच्चञ्चलमम्ब चित्तं बद्ध्वा दृढं भक्तिगुणेन शीघ्रम् |
स्थिरं करोमीति गुणैस्तुरङ्गं नियम्य किंबोधयसे जनांस्त्वम् ||५५||
துரங்க³வச்சஞ்சலமம்ப³ சித்தம்’ ப³த்³த்⁴வா த்³ரு’ட⁴ம்’ ப⁴க்திகு³ணேன ஶீக்⁴ரம் |
ஸ்தி²ரம்’ கரோமீதி கு³ணைஸ்துரங்க³ம்’ நியம்ய கிம்போ³த⁴யஸே ஜனாம்’ஸ்த்வம் ||55||

தாயே! சித்தம் குதிரைபோல் சஞ்சலமானது. நிலைகொள்ளாதது. அதனைப் பக்தி எனும் கயிற்றால் பிணைத்து விரைவில் நிலைத்து நிற்கச் செய்கிறேன் என கயிற்றால் குதிரையைக் கட்டி மக்களிடம் காட்டுகிறாயோ? (55)

त्वमश्वपूर्वां श्रियमानताय ददामि पूर्णं त्विति बोधनाय |
तुरङ्गमग्रे विदधासि मातरितीव मन्ये वद किं तथैव ||५६||
த்வமஶ்வபூர்வாம்’ ஶ்ரியமானதாய த³தா³மி பூர்ணம்’ த்விதி போ³த⁴னாய |

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

துரங்க³மக்³ரே வித³தா⁴ஸி மாதரிதீவ மன்யே வத³ கிம்’ ததை²வ ||56||

தாயே! (அச்வபூர்வாம் ரதமத்த்யாம் என வேதம் கூறியவாறு) தன்னை வணங்குபவருக்கு குதிரையை முன்னிட்ட லக்ஷ்மியை விரைவில் தருவேன் என்பதை நிரூபிக்கக் குதிரையை முன்னிட்டுள்ளாய் என நினைக்கிறேன். அவ்வாறா? நீயேசொல்! (56)

उन्नम्य पादद्वितयं तुरङ्गो वदन्निनीवास्ति गिरां सवित्रि |
विलङ्घयतां किं सरिदीश्वरोऽयमुत्प्लुत्य गच्छेयमथाम्बरं वा ||५७||
உன்னம்ய பாத³த்³விதயம்’ துரங்கோ³ வத³ன்னிதீவாஸ்தி கி³ராம்’ ஸவித்ரி |
விலங்க⁴யதாம்’ கிம்’ ஸரிதீ³ஶ்வரோ(அ)யமுத்ப்லுத்ய க³ச்சே²யமதா²ம்ப³ரம்’ வா ||57||


வாக்கின் தாயே! குதிரை இரு முன்னங்கால்களையும் தூக்கிநின்று, “கடலைக்கடக்கட்டுமா? வானில் எம்பிச் செல்லட்டுமா என சொல்வது போல் உள்ளது. (57)

पदे पदे दानववश्यता मे भवेच्छचीनाथसमीपवासे |
उच्चैः श्रवा इत्यधिगम्य मातस्तवाङ्घिसेवां प्रकरोति किंवा ||५८||
பதே³ பதே³ தா³னவவஶ்யதா மே ப⁴வேச்ச²சீநாத²ஸமீபவாஸே |
உச்சை꞉ ஶ்ரவா இத்யதி⁴க³ம்ய மாதஸ்தவாங்கி⁴ஸேவாம்’ ப்ரகரோதி கிம்’வா ||58||


தாயே! "இந்திரனிடமிருந்தால் அடிக்கடி அஸுரர் வசமாக வேண்டியுள்ளது" என உணர்ந்து உச்சைச் சிரவக்குதிரை உன் சரணஸேவை செய்கிறதோ? (58)

अश्वो वाहृतां न याति दिविषद्वृन्दस्य वेदा इति प्राहुस्तं च निशम्य रोषसहितस्त्वत्सन्निधिं प्राप्य किम् |
मिथ्या कर्तुमहो तदीयवचनं देव्यास्तवाम्बानिशं वाहत्वं कुतुकी जगाम तुरगाधीशो गिरां देवते ||५९||
அஶ்வோ வாஹ்னதாம்’ ந யாதி தி³விஷத்³வ்ரு’ந்த³ஸ்ய வேதா³ இதி ப்ராஹுஸ்தம்’ ச நிஶம்ய ரோஷஸஹிதஸ்த்வத்ஸந்நிதி⁴ம்’ ப்ராப்ய கிம் |
மித்²யா கர்துமஹோ ததீ³யவசனம்’ தே³வ்யாஸ்தவாம்பா³நிஶம்’ வாஹத்வம்’ குதுகீ ஜகா³ம துரகா³தீ⁴ஶோ கி³ராம்’ தே³வதே ||59||

வாக்கின் தேவதையே! "தேவதா கணத்திற்குக் குதிரை வாஹனமாகாது" என வேதம் கூறுவதைக் கேட்ட குதிரைத் தலைவன், ரோஷத்துடன் உன் அருகில் வந்து வேதத்தின் சொல்லைப் பொய்யாக்க ஆர்வத்துடன் வாஹனமாயிற்றோ? (குதிரை வாஹனக் காட்சி) (59) (தொடரும் …)







**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்


### மூன்றாவது ஸர்கம்

“ஹே தசரத மஹாராஜனே! தேவர்களால் உண்டாக்கப்பட்டதும் புதல்வர்களை அளிக்கக்கூடிய தெய்விகசக்தி உடையதுமான இந்தப் அபூர்வமான பாயசத்தைப் பெற்றுக் கொள். அந்த பரமாத்மாவையே நீ மகனாக அடையப் போகிறாய்! இதில் சந்தேகம் வேண்டாம்!" என்று கூறியபடி, அரசரிடம் பாயஸத்தைக் கொடுத்துவிட்டு அக்னி பகவான் மறைந்து போனார். மிகவும் சந்தோஷம் அடைந்த அந்த தசரதர் தன் விருப்பம் நிறைவேறியவராய் , (வசிஷ்டர், ரிஷ்யசிருங்கள் ஆகிய) அவ்விரு மாமுனிவர்களையும் வணங்கினார்.


வசிஷ்டர் மற்றும் ரிஷ்யசிருங்கரின் அனுமதியுடன், கௌசல்யைக்கும் கைகேயிக்கும் பாயஸத்தில் அரைப்பங்கு வீதம் மிகவும் சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் கொடுத்தார். அப்போது சுமித்திரையும் அங்கே வந்தாள். புத்திரனை உண்டாக்கக்கூடிய அந்தப் பாயஸத்தில் கௌசல்யை, தன் பங்கிலிருந்து சரிபாதியை மகிழ்ச்சியோடு அவளுக்குக் கொடுத்தாள். கைகேயியும் உடனே தன்னுடைய மனம் நிறைந்து தன் பங்கிலிருந்து பாதியைக் கொடுத்தாள். அதனைப் பருகிய மூன்று அரசிகளும் கருவுற்றார்கள்.

அவர்களின் வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்த தெய்வாம்சக் கருவின் பிரகாசம் அவர்கள் உடல்மேலும் பரவியதால் அவர்கள், தேவமாதர்களைப் போல் அரச மாளிகையில், உலவினார்கள். பத்தாவது மாதத்தில் அற்புதமான ஓர் ஆண்மகவை முதலில் பெற்றெடுத்தாள், பட்டத்து அரசியான கௌசல்யை. சைத்ர மாதம், வளர்பிறை, நவமிதிதி, மங்களமான கடகலக்னம், புனர்வசு நட்சத்திரம், ஐந்து கிரஹங்கள் உச்சத்தில் இருக்க, சூரியன் மேஷ ராசியில் சஞ்சரிக்கும் வேளையில், அகில உலகங்களுக்கும் தலைவரும் சனாதனருமான பகவான் தோன்றினார். (அப்போது தேவர்கள்) மலர் மாரி பொழிந்தார்கள்.

நீலோத்பல மலர் போன்ற சியாம வண்ணம்; பொன்னாடை; நான்கு கைகள், செவ்வரி படர்ந்த தாமரைக் கண்கள்; செவிகளில் ஒளிவீசும் குண்டலங்கள்: ஆயிரம் சூரியர்களைப் போன்ற பேரொளி; தலையில் கிரீடம்: சுருளான கேசம், சங்கம், சக்ரம், கதை, தாமரை, வனமாலை சூடியவர்; இதயத்தில் பேரருள் என்ற சந்திரன் இருப்பதைச் சூசகமாய் தெரிவிப்பது போல, புன்முறுவல் தவழும் முகத் தாமரை; கருணாரஸத்தால் நிரம்பிய, குவளை மலரின் இதழ் போன்ற அகலமான கண்கள்; ஸ்ரீவத்ஸம்-மாலைகள்-தோள்வளை-கொலுசு



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

முதலியவற்றால் அழகு செய்யப்பட்டவர்! இப்படித் தோன்றிய அந்த பகவானைக் கண்டு மிகவும் வியப்படைந்த கௌசல்யை, கண்களில் ஆனந்தக் கண்ணீர் தளும்ப, அந்த ஷ்யாமள வண்ணனை வணங்கி, கைகூப்பிக் கொண்டு உடல் மட்டும் சிலிர்க்க கண்களில் ஆனந்த கண்ணீர் ஆறாக பெறுக கௌசல்யை கூறினாள் :

"தேவதேவரே! சங்கு, சக்கரம், கதை ஏந்தியவரே! தங்களுக்கு நமஸ்காரம். தாங்கள் பரமாத்மா; அச்யுதர்; அனந்தர்; பூரணர்; புருஷோத்தமர். தாங்கள் சொல்லுக்கும் மனத்துக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டவர்; ஸத்தான மெய்ஞான வடிவானவர் என்று வேத வல்லுநர்கள் உங்களை புகழ்ந்து கூறுகிறார்கள்.

ஸத்வம்-ரஜஸ்-தமஸ் ஆகியவைகளுடன் கூட. மாயையின் துணைகொண்டு தாங்கள் தான் அண்டங்களைப் படைக்கிறீர்கள்; காப்பாற்றுகிறீர்கள்; அழிக்கிறீர்கள் என்றாலும் தாங்கள் எப்போதும் முக்குணங்களுக்கும் மாயைக்கும் அப்பாற்பட்ட தெளிவான துரிய நிலையில் நிலைத்திருக்கிறீர்கள். நீங்கள் எந்தச் செயல்களையும் செய்பவர் இல்லை; ஆனால், ஏதோ காரியம் செய்து கொண்டிருப்பவரைப் போலவும்; எங்கும் நடந்து செல்பவர் போலவும் காட்டுகிறீர்கள். ஆனால் நடந்து செல்வதைப் போலவும்; எதையும்) கேளாதவராக இருந்தும் எல்லாவற்றையும் கேட்பவர் போலவும்; எதையும் பார்க்காதவராக இருந்தாலும் எல்லாவற்றையும் பார்ப்பவர் போலவும் தோற்றமளிக்கிறீர்கள்.

தாங்கள், 'உயிருக்கும் மனத்துக்கும் விஷயமாகாத தனித்தன்மையான பொருள் என்றெல்லாம் வேதம் கூறுகிறது. எல்லாப் பிராணிகளிடமும் தாங்கள் சமநோக்குடன் இருக்கிறீர்கள். என்றாலும் அறியாமை என்னும் இருள் சூழ்ந்த உடையவர்களால் இந்த உண்மை காணப்படுவதில்லை; மெய்ஞானம் பெற்றவர்கள், தெளிவாகப் பார்க்கிறார்கள். மனம் தங்கள் வயிற்றில், பிரும்மாண்டங்கள் எல்லாம் மிகவும் நுண்ணிய அணுக்களாகத் தெரிகின்றன. ரகு குலத்தில் தோன்றியவரே! தாங்கள் என் வயிற்றில் பிறந்தீர்கள் என்பதால் அயோத்தி மக்கள் பெருமிதம் அடையப் போகிறார்கள். ஆனால் உண்மை என்ன? தாங்கள் பக்தர்களுக்கு வசப்பட்டவர் என்பதை இப்போது நானே கண்டுவிட்டேன்! நான் நாள்தோறும் தங்களை ஆராதித்து வந்தேன். அதன் பலனாகத் தாங்கள் என் மகனாகப் பிறந்தது நீங்கள் என்னிடம் உள்ள பிரியத்தையே இது காட்டுகிறது.

(தொடரும்...)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://www.voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |


ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்